# அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை

(பதிவு எண் : 982 / 2012)

உயர்கல்விக்கு உதவும் கரங்கள்.

**சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருப்பவர்கள் உயர்வதற்கான ஒரே கருவி கல்வி**

## கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன், அறக்கட்டளைத் தலைவர்



தமிழகத்தில் வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் மேல்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்த அனைத்து ஏழை மாணவர்களும் இடைநிற்றலின்றி உயர்கல்வி பயில உதவி செய்ய வேண்டும் என்னும் சமூகப் பொறுப்புணர்வுடன் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை** கடந்த 10 ஆண்டுகளாக வெற்றிகரமாகத் தொண்டாற்றி வருகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு உயர்கல்வி அளித்துவிட்டால், அவர் படித்து நல்ல வேலையில் அமர்ந்து தன்னுடைய சகோதர, சகோதரிகளைப் படிக்க வைத்து, ஒவ்வொரு குடும்பமும் முன்னேறும்போது உயர்கல்வியும், வேலைவாய்ப்பும், மாவட்டத்தின் வளர்ச்சியும் ஒரு சேர உயரும் என்பது என் நம்பிக்கை. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெற்றவர்களில் 3-இல் 2 பங்கு பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் குழந்தைத் திருமணங்களும், வளர் இளம்பெண்கள் குழந்தை பெறுவதும் வெகுவாகக் குறைந்து வருகிறது. அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை போன்று தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் உள்ளவர்களும் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவி செய்யத் தொடங்கிவிட்டால் தமிழ்நாடு உயர்கல்வியில் இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக விளங்கும்.

## திரு. ஜா. லட்சுமணன், அறக்கட்டளைச் செயலாளர்



கல்வி நீரில் அழியாது, தீயில் எரியாது, வாயுவால் பிரியாது, வானில் பறக்காது என்கிற சிறப்பு வாய்ந்தது. கல்வி என்பது அழியாச் செல்வம். அத்தகைய அழியாச் செல்வத்தை ஏழை, எளிய மாணவர்களுக்கு வழங்கினால் வாழையடி வாழையாய் குடும்பம் வளரும், வறுமையின்றி வாழ்க்கை விளங்கும் என்கிற சிறந்த சிந்தனையைத் தன் மனதில் பதியம் போட்டு வளர்த்தவர்தான் விஐடி வேந்தரும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள். அவருடைய சீரிய தலைமையில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் மூலம் ஏழை மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை அறக்கட்டளையில் உதவி பெற்றவர்களில் 68% முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள்.

## திரு. கே. ஜவரிலால் ஜெயின், அறக்கட்டளைப் பொருளாளர்



கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்வியினால் மட்டுமே வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். பள்ளிக்கல்வியை முடித்த அனைவரும் உயர்கல்வி பெற்றால், அவர்கள் குடும்பப் பொருளாதார நிலையை உயர்த்தலாம். ஏழை எளிய மாணவர்கள் அனைவரும் உயர்கல்வி பெற வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமையில் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அறக்கட்டளையின் பயனாளிகள் “கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என திருக்குறளில் கூறியிருப்பதுபோல் பயின்று வாழ்வில் முன்னேற வேண்டும். இதுவரை அறக்கட்டளையில் உதவி பெற்றவர்களில் 91% அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள்.

## அறக்கட்டளை உறுப்பினர்கள்




## "HEARTS" (Higher Education for All to Realize Transformation of the Society) திட்டம்

இத்திட்டம் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் வசிக்கக்கூடிய ஜவ்வாதுமலை ஒன்றியத்துக்குட்பட்ட மேல்நிலைப் பள்ளிகளில் +2 முடித்த பொருளாதார வசதியில்லாத 6,824 மாணவர்கள் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் உள்ளிட்ட பாடப்பிரிவுகளில் தங்குதடையின்றிப் படிக்கக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 7 கோடியே 46 இலட்சம் ரூபாய் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## சமூக நல நிதிகள் அறக்கட்டளை - கல்வி உதவித்தொகை வழங்குதல்

### Social Welfare Funds Trust, Chennai (SWF Trust)



விஐடியில் 2004 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பம் படித்துப் பட்டம் பெற்ற முன்னாள் மாணவர்களால் கடந்த 18 ஆண்டுகளாகச் சென்னையில் SWF Trust தொண்டாற்றி வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் 9 ஆம் நாள் கல்வி உதவித்தொகை வழங்கும் காணொளி நிகழ்வுக்கு விஐடி வேந்தரும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளைத் தலைவருமான கல்விக்கோ டாக்டர். கோ. விசுவநாதன் அவர்கள் தலைமை வகித்தார். SWF Trust தலைவர் திரு. வி.ஜே. இரமேஷ், செயலாளர் திரு. எல். சதிஷ்குமார், பொருளாளர் திரு. சி. இலட்சுமிகாந்த் மற்றும் SWF Trust உறுப்பினர்களும் அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையின் செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெற்று இவ்வாண்டு (2021 - 2022) கல்லூரியில் இறுதியாண்டு படிக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட 30 மாணவர்கள் (14 ஆண்கள், 16 பெண்கள்) பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல், வேளாண் மற்றும் செவிலியர் பிரிவுகளில் படிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் இறுதியாண்டுக்கான கல்விக் கட்டணம், விடுதி மற்றும் உணவுக்கான கட்டணம் 12 இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் ரூபாய் முழுவதையும் SWF Trust, Chennai வழங்கியது.

## கொடையாளர் & பயனாளிகள் சந்திப்பு

### KOSTAL INDIA PVT. LTD., RANIPET



இராணிப்பேட்டை பகுதியில் உள்ள Kostal India நிறுவனம், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித்தொகை பெறத் தேர்வாகிய மாணவர்களில் தேர்வு செய்யப்பட்ட 3 மாணவர்களுக்குக் கல்லூரிக் கல்விக் கட்டணம் முழுவதையும் வழங்குவதாக ஒப்புதல் அளித்து 3 மாணவர்களுக்கும் அவர்களின் கல்லூரிப் படிப்பு முடியும்வரை முழுக்கல்விக் கட்டணத்தையும் வழங்கி வந்தது. கல்வி உதவித்தொகை பெற்று கல்லூரிப் படிப்பை முடித்த 3 மாணவர்களும் கடந்த 20.10.21 அன்று கோஸ்டல் இந்தியா நிறுவனத்துக்கு நேரில் சென்று அதன் நிர்வாக இயக்குநர் திரு. சுரேஷ் பாஸ்கர் அவர்களைச் சந்தித்துக் கல்வி உதவித்தொகை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தனர்.

---

### FARIDA SHOES, AMBUR



ஆம்பூர் பகுதியில் உள்ள Farida Shoes நிறுவனம், அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் கல்வி உதவித் தொகை பெறத் தேர்வாகிய மாணவர்களில் தேர்வு செய்யப்பட்ட 5 மாணவர்களின் கல்லூரிக் கல்விக் கட்டணம் முழுவதையும் வழங்குவதாக ஒப்புதல் அளித்து 5 மாணவர்களுக்கும் அவர்களின் கல்லூரிப் படிப்பு முடியும்வரை முழுக் கல்விக் கட்டணத்தையும் வழங்கி வந்தது. கல்வி உதவித்தொகை பெற்றுக் கல்லூரிப் படிப்பை முடித்த 5 மாணவர்களும் கடந்த 17.11.2021 அன்று ஆம்பூர் பரிதா ஷூஸ் நிறுவனத்துக்கு நேரில் சென்று அதன் நிர்வாக இயக்குநர் திரு. இர்ஷாத் அஹமது மெக்கா அவர்களைச் சந்தித்துக் கல்வி உதவித்தொகை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தனர்.

## ஆளுமை மற்றும் வாழ்வியல் திறன் மேம்பாட்டுப் பயிற்சி



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் துறையும் இணைந்து கடந்த 21.12.2021 அன்று அக்கல்லூரியில், இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு “உங்கள் தொழில் திறன்களை கூர்மைப்படுத்துங்கள்” (Sharpen Your Career Skills) என்ற தலைப்பில் பயிற்சி அளித்தன. விஐடி பல்கலைக்கழகத் தொழில் வளர்ச்சி மையத்தின் உதவி இயக்குநர் டாக்டர். அனு பைசல் அவர்கள் மாணவிகளுக்குப் பயிற்சி அளித்தார். அக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 500 மாணவிகள் பங்கு பெற்றனர். கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

---



அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையும் வாணியம்பாடியில் உள்ள இஸ்லாமியா கல்லூரியின் சம வாய்ப்பு மையமும் இணைந்து கடந்த 23.12.2021 அன்று அக்கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு “பட்டதாரிகளுக்கான வாழ்க்கை மற்றும் தொழில் வாய்ப்புகள்” (Employability and Life Skills for Young People) என்ற தலைப்பில் பயிற்சி அளித்தன. விஐடி பல்கலைக்கழக மாணவர்கள் நல அமைப்பின் உதவி இயக்குநர் டாக்டர். என். ஷர்மிளா அவர்கள் பயிற்சி அளித்தார். அக்கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் 150 மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

## கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்களின் குரல்

ச. ஜெயலட்சுமி



என்னுடைய அப்பா நெசவு வேலை செய்கிறார். குடியாத்தம் அருகே உள்ள கூடநகரம் பகுதியில் வசிக்கிறேன். குடியாத்தம் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 821 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். குடியாத்தம் கே.எம்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் BCA பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரிடையாக விசாரித்து, நான் BCA படித்த 3 ஆண்டுகளுக்கும் எனக்கு உதவித்தொகை வழங்கி என்னுடைய உயர்கல்விக் கனவை நிறைவேற்றினார்கள். தற்பொழுது சென்னை திருவான்மியூரில் உள்ள QBBS மென்பொருள் நிறுவனத்தில் Business Solution Service - பிரிவில் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்குப் பேருதவி செய்த அறக்கட்டளைக்கு நன்றி.

---

ச. தருண்குமார்



நான் குடியாத்தம் அடுத்த மேல்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். என்னுடைய அம்மா என் சிறுவயதிலிருந்தே முடக்குவாதத்தால் அவதிப்பட்டு வருகிறார். என்னுடைய அப்பா விவசாயக் கூலி வேலை செய்து என்னைப் படிக்க வைக்கிறார். குடியாத்தம் திருவள்ளுவர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 1059 மதிப்பெண்கள் பெற்றுக் காட்பாடியில் உள்ள கிங்ஸ்டன் பொறியியல் கல்லூரியில் B.E., Mechanical Engineering பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். என் வீட்டுக்கு வருகைதந்து குடும்பச் சூழ்நிலையை நேரிடையாக விசாரித்து, நான் கல்லூரியில் படித்த 4 ஆண்டுகளும் எனக்குக் கல்வி உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள TATA Consultancy Service Pvt. Ltd - இல் Assistant System Engineer-ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கு உதவிய அறக்கட்டளைக்கு என் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எ. ஷாலினி



நான் வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுக்கா, காமராஜபுரம் கிராமத்தில் வசிக்கிறேன். என்னுடைய அப்பா மரம் வெட்டும் வேலை செய்கிறார். பில்லாந்திப்பட்டு அரசு ஆதி திராவிட நல மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பில் 962 மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சிப் பெற்றேன். நான் 12 ஆம் வகுப்பு படிக்கும் பொழுது என்னுடைய பள்ளிக்கு அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை அலுவலர்கள் வருகைதந்து 12 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி பற்றிய விழிப்புணர்வு அளித்தனர். அறக்கட்டளையில், பொருளாதார வசதியில்லாத மாணவர்கள் உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கி வருவதாகக் குறிப்பிட்டனர். நான் 12 ஆம் வகுப்பு முடித்துக் கோயம்பத்தூரில் உள்ள Nightingale Institute of Nursing Education - இல் B.Sc Nursing சேர்ந்தேன். அறக்கட்டளையில் உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். அறக்கட்டளையில் நேர்முகத்தேர்வுக்கு அழைத்துக் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையைக் கேட்டறிந்து, என் வீட்டுக்கு வருகைத்தந்து குடும்பச் சூழ்நிலையை நேரிடையாக விசாரித்து எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். இப்பொழுது டெல்லியில் உள்ள Medanta Hospital-இல் Staff Nurse - ஆகப் பணிபுரிகிறேன். என் உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி ஊக்கமளித்த அறக்கட்டளைக்கு மனமார்ந்த நன்றி.

---


ஸ்ரீ. கார்த்திகேயன்




நான் குடியாத்தம் பகுதியில் வசிக்கிறேன். என்னுடைய குடும்பம் பொருளாதார வசதியில்லாத குடும்பம். என்னுடைய அப்பா விவசாயக் கூலி வேலை செய்கிறார். குடியாத்தம் நேஷனல் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு முடித்து, குடியாத்தம் கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் BCA பாடப்பிரிவில் சேர்ந்தேன். அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளையை அணுகி உயர்கல்வி பயில உதவித்தொகைக்கு விண்ணப்பித்தேன். என் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலையை விசாரித்து, எனக்கு உயர்கல்வி பயில உதவித்தொகை வழங்கினார்கள். அறக்கட்டளை வழங்கிய உதவித்தொகை என்னுடைய உயர்கல்விக்கு மிகவும் உதவியாக இருந்தது. இப்பொழுது நான் வேலூரில் உள்ள AGS Health Care Pvt. Ltd - இல் Process Associate - ஆகப் பணிபுரிகிறேன். என்னுடைய உயர்கல்விக்கு உதவித்தொகை வழங்கி உதவிய அறக்கட்டளைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்வி உதவித்தொகை பெற்றவர் - 6,824


### Gender (2012 - 2021)





### First Generation Graduates (2012 - 2021)




### Course (2012 - 2021)




### School wise Beneficiaries Breakup (2012 - 2021)




இந்த மகத்தான சேவையில் தாங்களும் பங்கு பெற்றுத் தங்கள் வீட்டில் நடக்கும் பிறந்தநாள், திருமணநாள் மற்ற இனிய நிகழ்வுகளின் மகிழ்ச்சியோடு அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கி ஏழை மாணவர்களின் உயர்கல்விக்கு உதவலாம். இதன் மூலம் அவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

**தாங்கள் வழங்கும் நன்கொடைக்கு வருமானவரிச் சட்டம் 80G பிரிவின் கீழ் வரிவிலக்கு உண்டு.**

**முகவரி**

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
அனைவர்க்கும் உயர்கல்வி அறக்கட்டளை,
அறை எண்: 215, டாக்டர். எம்ஜிஆர். பிளாக்,
விஐடி வளாகம், வேலூர் - 632 014. தமிழ்நாடு.
தொலைபேசி : 0416 - 224 7777, 220 2196

**வங்கி விவரம்**

**Universal Higher Education Trust (UHET),**
A/C. No : 6063960011,
Indian Bank, VIT Branch,
Katpadi, Vellore - 632 014.
IFSC Code : IDIB000V086

**இசையட வாழ்தல் ஈதலே என்பதை உணர்வோம்!**
**மகிழ்வித்து மகிழ்ந்திருப்போம்!**